Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகை யின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

God is faithful for the past seventy years.

Vol. 70 பூமியின் எல்லைகளெல்லாம் நினைவு கூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்;. சங். 22: 27 ஜூலை 2024 No.7

தேவனிடத்திலுள்ள விசுவாசத்தில் எதிர்காலத்தை எதிர்கொள்ளுங்கள்

Face the future with faith in God

W.C. Moore

"அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்து போம்" மத்.24:12

அக்கிரமம் மிகுதியாகி அனேகருடைய அன்பு தணிந்து போம் என்பதால் நாமும் அந்த **'அநேகர்'** கூட்டத்தில் பங்கு பெற்று நமது ஆண்டவரிடத்தில் காண்பிக்கும் அன்பில் குறைவுபடக் கூடாது. நமக்கு எதிரான சவாலும் எச்சரிப்பும் நம்மைத் தாமே உற்சாகப்படுத்தி தேவனைப் பற்றிக் கொண்டு நமது குறிக்கோளுக்கு நேராக தொடர்ந்து ஓடச் செய்ய வேண்டும். முன்பு போலல்லாது சுற்றிலும் எல்லாம் இருளாக இருந்தாலும் நாம் விசுவாசத்தோடே ஓட வேண்டும்.

தேவனுடைய வசனத்தில் கொடிய காலங்களைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது (2தீமோ. 3:1-17) வாசிக்க. இவையெல்லாம் நாம் பின்வாங்கவோ படை பலத்தைக் குறைப்பதற்காகவோ சொல்லப்படவில்லை. நாம் முன்னேறிச் செல்ல வேண்டும். இப்போது நாம் சந்திக்கும் பயங்கரமும், இடுக்கண்ணும் ஆபத்தும் நிறைந்த நாட்கள் நமக்கு வாய்ப்பான நாட்களாகும். மக்கள் மத்தியில் சாட்சியாயிருக்க ஆண்டவர் நம்மை அழைக்கிறார். (அப்.1:18 படிக்க) **"இவ்விதமாய், மனுஷர், உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது".** (மத்.5:16)

தேவனுடைய அன்பாகிய ஒளி அவருடைய இரட்சிப்பின் உறுதி ஆகியவை நம்மை இரட்சித்து நாம் நேசிக்கும் தேவனண்டை நம்மை சேர்த்திருக்கிறது. எனவே பயத்தாலும் மனச்சோர்பாலும் வாடியிருக்கும் மக்களுக்கு முன்பாக பிரகாசித்து அவர்களும் தேவனுக்கு நேராகத் திரும்பும்படி செய்வோம்.

தேவனுடைய உத்தமத்தில் முழுவதும் சார்ந்து

இந்த இருண்ட காலத்தில் எல்லாப் பிரச்சனைகளிலும் தேவன் மேலுள்ள முழு விசுவாசத்தால் அவருடைய உத்தமத்தைச் சார்ந்து கொள்வோம். எந்தச் சூழலும் எந்த நிலையும், கடினங்களும், இருண்ட ஆபத்தான சூழ்நிலைகளும், இடையூறுகளும் அவருக்கு கடினமானவைகளல்ல, அவர் எல்லாவற்றையும் அறிகிறவர். அவர் நம்மை விசாரிக்கிறவர் (1பே.5:7; 1யோ.3:20) எதுவுமே அவருக்கு மிகக் கடினமல்ல (எரே.32:17) **தேவனால் எல்லாம் கூடும்.** மத் 19:26.

கடினமான சூழ்நிலைகளை எதிர் நோக்கும் போதும், தடைகள், எதிர்ப்புகள் வரும் போதும், துயரமான சோதனைகள் வரும் போதும், தேவைகள் பெரிதாகும் போதும், பொறுப்புகள் பாரமாகும் போதும், பயம், திகில், நடுக்கம் ஏற்படும் போதும் களிகூறுங்கள்! இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டவர் பெரிய வராயிருக்கிறார். அவர் நம்மை நேசித்து நாம் அவரை நம்பி எப்போதும் கீழ்படியும்படி விரும்புகிறார். நம்மை பயப்படுத்துகிற எந்த இக்கட்டையும் விட அவர் மிகவும் பெரியவர்.

கடின சூழல்களில் பயத்தோடும் நடுக்கத்தோடும் தேவன் நம்மை விட்டு தூரம் போய் விட்டார், அவரது வல்லமை எடுபட்டுப் போயிற்று அவரது ஞானம் குன்றி விட்டது. அவர் உத்தம சிருஷ்டிகரல்ல, நமது அன்பையும் உருக்கத்தையும் தமது ஒரே குமாரனைத் தந்தவரல்ல என்று எண்ண வேண்டாம் (1பே.4:12-19; ரோமர் 8:26-39) நாம் ஆவலோடு அவரது இயற்கைக்கு மேலான வல்லமை விளங்க அவருக்கு இடமளிப்போம். அல்லேலூயா.

"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப் படாமல், எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை, ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்." (பிலிப்.4:6)

சரியாக வாழுங்கள்

தேவனுடைய வார்த்தையின் படி, நாம் பாவத்தில் வாழாமலும் அவருடைய வார்த்தையை விசுவாசியாமல் பிற கிறிஸ்தவர்களை விமர்சித்து அவரை துக்கப்படுத்தாமலும் பிறரை வெறுத்தோ வஞ்சித்தோ நமது கடமைகளை உதாசீனப்படுத்தவோ அல்லது வேறு எந்த பாவத்துக்கும் உட்படாமல் கீழ்படிதலுடன் இறுதி மட்டும் நாம் தேவனுடைய உதவியினை நாடி அவரது சித்தத்திற்கும் வார்த்தைக்கும் நமது வாழ்வு ஒத்திருக்கிறதா என்று கவனித்து வாழுவோம்.

"பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளியென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியம் கொண்டிருந்து, அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு, அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளை செய்கிறபடியினால் நாம் வேண்டிக் கொள்கிறதெதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்ளுகிறோம்." 1 யோவா.3 21-22

தேவனுடைய வார்த்தையை உட்கொள்ளுங்கள் "...மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்" மத். 4:4

நமது சரீரத்துக்குத் தேவை ஏற்படுவது போல நமது ஆத்துமாவுக்கும் ஊட்டச்சத்து தேவைப்படுகிறது என்பதை உணருங்கள். தேவ வசனத்தை வாசிக்கவும் சிந்திக்கவும் சமயம் எடுத்து அதை பயன்படுத்துங்கள். அப்போது அவரது சித்தத்தை அறியவும் அவரது சித்தத்தை செய்யவும் பெலப்படுவீர்கள்.

அந்தகாரத்தில் தேவனை நம்புங்கள்

ஈசாக்கைப் பெற்றுக் கொள்வதற்காக ஆபிரகாம் விசுவாசத்தோடு பல வருடங்கள் காத்திருந்தான். எனவே ஜெபங்களுக்கான பதில் தாமதித்தாலும் நாம் விசுவாசித்துக் கொண்டேயிருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். இருள் நாட்களிலும் கூட தேவனை விசுவாசிக்கக் கற்றுக் கொள்வது அவசியம்.

"உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு, தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனை சார்ந்து கொள்ளக் கடவன்." ஏசா. 50:10

தாவீது எப்போதும் மலையின் உச்சியில் இருந்தாரா? பவுல் எப்போதும் கஷ்டங்களுக்கும் தீமைகளுக்கும் வெளியே இருந்தாரா? (சங்கீத புஸ்தகம், 2கொரி.11:23-33, 12:1-10, பிலி.4:13) ஆகிய வசனங்களைப் படித்துப் பாருங்கள். தேவன் நம்மை

(4-ம் பக்கம் பார்க்க)

வாசகர் கவனத்திற்கு

வங்கி வழியாக காணிக்கை அனுப்புகிற வாசகர்கள் தகவல் தராவிட்டால், வாசகர் பெயர் எங்களுக்கு தெரியாதபடியால், ரசீது அனுப்ப இயலாது, பத்திரிக்கையும் அனுப்ப இயலாது.

உடனே எங்களுக்கு SMS or Whatsapp அனுப்புங்கள்

Mobile : **95432 21008**

Whatsapp : **9489740295**

e-mail:varukayinthoothan@hotmail.com

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய் ஏசாயா 58:11.

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2024 ஜூலை மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், 'வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்' துதிக்கிறேன். ஒரு வாசகர் கடிதத்தை கீழே அச்சிடுகிறேன்.

21-02-2024, Kancheepuram

வருகையின் தூதன் ஆசிரியர் வெஸ்லி தேவதாசன் ஐயா அவர்களுக்கும் தங்கள் குடும்பத்தினருக்கும், சக ஊழியர்களுக்கும் ஸ்தோத்திரம் செய்து எழுதும் கடிதம்.

என் விண்ணப்பம், செப். 23-ம் தேதி முதல் டிசம்பர் 14 வரை கொடுமையான பாதிப்பிலிருந்தேன். காரணம் கீழே விழுந்து பந்து கிண்ணம் பகுதி உடைந்து ஆப்ரேஷன் செய்யப்பட்டு, மியாட் ஆஸ்பிட்டலில் சேர்க்கப்பட்டு தற்போது வீட்டிற்குள்ளே நடக்கிறேன். வெளியில் 6 மாதத்திற்கு எங்கும் செல்லுதல் கூடாது என்று டாக்டர் கூறிவிட்டார்கள்.

ஆலயத்திற்கும் செல்ல முடியவில்லை. காலம் தவறாமை, சுறுசுறுப்பு, எந்த நோயும் என்னை தொடாநிலை. இப்படிப்பட்ட நிலையில் இருந்தேன். தற்போது ஆலயம் செல்லாமல் T.V.-யில் ஊழியம் செய்வதையும் வேதம் வாசிப்பதுமே என் பணியில் ஆழ்ந்துள்ளேன். (எனக்கு வயது 78) ஆனாலும் என் தேவனுடைய பெலத்தில் வாழ்ந்து தற்போது முடங்கப்பட்டுள்ளேன். ஆதலால் ரூ.500/- அனுப்பியுள்ளேன். கால தாமதமாகி விட்டது. என் சூழ்நிலை என்னை புரட்டி போட்டது. 44 வருடம் தூதன் எங்கள் வீடு தேடி வரும். நான் சுகம் பெற்று மீண்டும் பழைய நிலையில் ஆலயம் செல்ல எனக்காக ஜெபிக்கவும். சகோதரி G.V.

உங்களுக்காகவும், வாசகர் அனைவருக்காகவும் ஜெபிக்கிறேன். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனே கூட இருப்பதாக.

உதவி : **94897 40295**
அலுவலகம் : **95432 21008**

உங்கள் அன்பு சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்

நான் தேசத்தை அழிக்காதபடிக்குக் கிறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவுந் தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன். எசேக்.22:30

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான்...

கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய எலியா ஆகாபை நோக்கி: என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று **இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான்** அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றான் 1இராஜா.17:1.

எலியாவின் ஏழு அனுபவங்கள்

1. கர்த்தருடைய வார்த்தை

பின்பு கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று, 1 இராஜா.17:2
அவன் போய், கர்த்தருடைய வார்த்தையின்படியே .... தங்கியிருந்தான். 17:5
அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று, 17:8
...கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு உண்டாகி: 18:1

Blessed is the man என்று சங்கீத புத்தகம் ஆங்கிலத்தில் ஆரம்பிக்கிறது. கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் சங்.1:2.

2025-ம் ஆண்டு பத்திரிகை அனுப்ப, ஆண்டு காணிக்கை குறைந்த பட்சம் ரூபாய் **500** அனுப்புங்கள்.

2024 கர்த்தருக்கு முன்பாக உண்மையும் உத்தமுமாய் நடக்கும் ஆண்டு
I have walked before thee in truth and with a perfect heart. Isa.38:3

ஆண்டு காணிக்கை ரூபாய் 500

உமது வசனத்தைத் தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக் கொள்ளும் சங்.119:148.

உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுவதும் அது என் தியானம் சங்.119:97.

உமது வேதம் என் மன மகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன் சங்.119:92.

உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை சங்.119:165.

2. கருத்தாய் ஜெபம் பண்ணினான்

... நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.

எலியா என்பவன் நம்மைப் போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழை பெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம் பண்ணினான். அப்பொழுது மூன்று வருஷமும் ஆறு மாதமும் பூமியின் மேல் மழை பெய்யவில்லை.

மறுபடியும் ஜெபம் பண்ணினான். அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது யாக். 5:16-18.

தேவன் ஒரு மனிதனை - ஒரு குழுவையல்ல, ஒரு கூட்டத்தையல்ல, ஒரு தூதனையல்ல, ஆனால் ஒரு மனிதனை, நம்மைப் போல் பாடுள்ள ஒரு மனிதனை எழுப்பினார். தேவன் ஒரு மனிதனைத் தேடியது பிரசங்கிக்க அல்ல, பிளப்பிலே நிற்க! ஆபிரகாமைப் போல இப்போது எலியா தேவனுக்கு முன்பாக நின்றான். எனவே பரிசுத்த ஆவியானவர் எலியாவின் வாழ்க்கையை "**அவன் ஜெபித்தான்**" என்று இரண்டே வார்த்தைகளில் எழுத முடிந்தது. **தேவனுக்கோ, மனிதருக்கோ, இதைவிட அதிகமாக எந்த மனிதனும் செய்ய முடியாது.** இன்று சபையில் ஆலோசனை கூறுவோரின் எண்ணிக்கை அளவுக்கு **அழுது புலம்புவோர்** இருந்தால் ஓராண்டிற்குள் எழுப்புதல் வந்து விடும்!

இப்படிப்பட்ட ஜெபிக்கும் மனிதர்களே எப்போதும் நாட்டுக்கு நன்மை செய்பவர்கள். எலியாவும் அப்படியே. அவன் கேட்டது பரலோகக் குரல்; கண்டது பரம தரிசனம்; ருசித்தது வல்லமை; எடை போட்டது எதிரியை; துணை கொண்டது தேவனை; பெற்றது அமோக வெற்றி! அவன் சிந்திய கண்ணீர், சகித்த ஆத்தும வேதனை, விட்ட பெரு மூச்சுகள், இவையெல்லாம் தேவனுடைய தொகுப்புப் புத்தகத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. முடிவில் தவறாத தீர்க்கதரிசனம் உரைக்க வெளி வந்தான். தேவனுடைய இருதயம் அவனுக்குத் தெரியும். எனவே அவன் - ஒரு தனி மனிதனாக - ஒரு நாட்டை அடக்கி இருந்த நிலவரத்தையே மாற்றி விட்டான். 'செங்குத்துப் பாறை' போன்ற அவன் கீலேயாத்தின் மலைகளைப் போன்று கெம்பீரமாகவும் அசையாமலும் நின்று ஒரு வார்த்தையினால் வானத்தை

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்புகள்

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அடைத்தான். எல்லாப் பூட்டுக்கும் பொருந்தும் விசுவாசமென்னும் சாவியினால் எலியா வானத்தைப் பூட்டி, சாவியைப் பையில் போட்டுக்கொண்டு, ஆகாபை நடுங்கச் செய்துவிட்டான். தேவன் ஒரு மனிதனைப் பிடித்துக் கொள்ளுவது அருமையானது; ஆனால் மனிதன் தேவனைப் பற்றிப் பிடித்துக் கொள்வது அதிலும் அருமையானது. ஒரு தேவ மனிதன் "ஆவிக்குள்" பெருமூச்சு விடட்டும்; அப்பொழுது தேவன் "என்னை விட்டு விடு" என்று கதறுவார். எலியாவைப் போல் நாமும் சாதிக்க விரும்புகிறோம். ஆனால் அவனைப் போல் துன்பங்களைச் சகிக்கவோ விரும்புவதில்லை!

3. கேரீத்

பின்பு கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று, அவர்:

நீ இவ்விடத்தை விட்டுக் கீழ்த் திசையை நோக்கிப் போய், யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையில் ஒளித்துக் கொண்டிரு.

அந்த ஆற்றின் தண்ணீரைக் குடிப்பாய்; அங்கே உன்னைப் போஷிக்க, காகங்களுக்குக் கட்டளையிடுவேன் என்றார்.

அவன் போய், கர்த்தருடைய வார்த்தையின்படியே யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையிலே தங்கியிருந்தான்.

காகங்கள் அவனுக்கு விடியற் காலத்தில் அப்பமும் இறைச்சியும், சாயங்காலத்தில் அப்பமும் இறைச்சியும் கொண்டு வந்தது; தாகத்திற்கு அந்த ஆற்றின் தண்ணீரைக் குடித்தான் 1 இராஜா.17:2-6.

எலியாவின் தேவன் நம்முடைய தேவன். அவர் சொல்லுகிறார்: காகங்களைக் கவனித்துப் பாருங்கள், அவைகள் விதைக்கிறதுமில்லை அறுக்கிறதுமில்லை, அவைகளுக்கு பண்டசாலையுமில்லை, களஞ்சியமுமில்லை, இல்லாவிட்டாலும் அவைகளையும் தேவன் பிழைப்பூட்டுகிறார்; பறவைகளைப் பார்க்கிலும் நீங்கள் எவ்வளவோ விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள் லூக்.12:24.

ஒரு தேவனுடைய பிள்ளையை தேவன் '**ஒளித்துக் கொண்டிரு**' என்று சொல்லும் போது ஒளித்துக் கொள்ள வேண்டும்; '**காண்பி**'(18:1) என்று சொல்லும் போது காண்பிக்க வேண்டும்.

4. சாறிபாத்

நீ எழுந்து, சீதோனுக்கடுத்த சாறிபாத் ஊருக்குப் போய், அங்கே தங்கியிரு; உன்னைப் பராமரிக்கும்படி அங்கே இருக்கிற ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன் என்றார் 1இரா17:9.

அதற்கு அவள் (விதவை): பானையில் ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல், என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்; இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப் போக, அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள் 1இரா.17:12.

அப்பொழுது எலியா அவளைப் பார்த்து: ...ஆனாலும் **முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டு வா...** என்றான் 17:13,14.

கர்த்தர் எலியாவைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்து போகவும் இல்லை கலசத்தின் எண்ணெய் குறைந்து போகவும் இல்லை 17:16.

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப் படும் மத். 6:33.

But seek ye first the kingdom of God.

5. கர்மேல்

எலியா ஆகாபை நோக்கி: இப்போதும் **கர்மேல்** பர்வதத்திலே இஸ்ரவேலனைத்தையும், பாகாலின் தீர்க்கதரிசிகள் நாநூற்றைம்பது பேரையும், யேசபேலின் பந்தியிலே சாப்பிடுகிற தோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள் நாநூறு பேரையும் என்னிடத்தில் கூட்டிக் கொண்டு வர ஆட்களை அனுப்பும் என்றான்.

அப்பொழுது எலியா ஜனங்களை நோக்கி: **அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம் என்றான்.**

பாகாலின் தீர்க்கதரிசிகள்: பாகாலே, எங்களுக்கு உத்தரவு அருளும் என்று காலை தொடங்கி.. கூப்பிட்டார்கள்; ஆனாலும் ஒரு சத்தமும் பிறக்கவில்லை.

அப்பொழுது எலியா...தகர்க்கப்பட்ட கர்த்தருடைய பலிபீடத்தை செப்பனிட்டு, விறகுகளை அடுக்கி, ஒரு காளையைச் சந்து சந்தாகத் துண்டித்து விறகுகளின் மேல் வைத்தான்.

எலியாவின் ஜெபம்

அந்திப்பலி செலுத்தும் நேரத்திலே, தீர்க்கதரிசியாகிய எலியா வந்து:

- **தேவனாகிய கர்த்தாவே,**
  இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும்,
- **நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும்,**
- **நான் இந்தக் காரியங்களையெல்லாம்**
  உம்முடைய வார்த்தையின்படி செய்தேன்
  என்றும் இன்றைக்கு விளங்கப் பண்ணும் என்றான்.
- Let it be known this day that thou art God in Israel,
- and that I am thy servant,
- and that I have done all these things at thy word.

அக்கினி

அப்பொழுது கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியை பட்சித்து போட்டது.

ஜனங்களெல்லாரும் இதைக் கண்ட போது, முகங்குப்புற விழுந்து: **கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம்** என்றார்கள் 1 இரா.18:18-39.

அக்கினி இறங்க வேண்டும்
அற்புதம் நடக்க வேண்டும்
கர்த்தரே தெய்வம் என்று
ஜாதிகள் முழங்க வேண்டும்

6. மழைக்காக ஜெபம்

அநேக நாள் சென்று மூன்றாம் வருஷமாகையில், கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு உண்டாகி: நீ போய் ஆகாபுக்கு உன்னைக் காண்பி; நான் தேசத்தின் மேல் மழையைக் கட்டளையிடுவேன் என்றார் 1இரா.18:1.

...பின்பு எலியா கர்மேல் பர்வதத்தினுடைய சிகரத்தின் மேல் ஏறி, தரையிலே பணிந்து, தன் முகம் தன் முழங்காலில் பட குனிந்து,

தன் ஊழியக்காரனை நோக்கி: நீ போய் சமுத்திர முகமாய்ப் பார் என்றான்;

ஏழாந்தரம் இவன்: இதோ, சமுத்திரத்திலிருந்து ஒரு மனுஷனுடைய உள்ளங்கை அத்தனைச் சிறிய மேகம் எழும்புகிறது என்றான்;

அதற்குள்ளாக வானம் மேகங்களினாலும் காற்றினாலும் கறுத்துப் பெருமழை உண்டாயிற்று 1இரா.18:42-45.

பின்மாரி காலத்து மழையைக் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொள்ளுங்கள்; அப்பொழுது கர்த்தர் மின்னல்களை உண்டாக்கி, வயல் வெளியில் அவரவருக்குப் பயிருண்டாக அவர்களுக்கு மழையைக் கட்டளையிடுவார் சக.10:1.

7. சோர்வு

அவன் (எலியா) வனாந்தரத்தில் ஒரு நாள் பிரயாணம் போய், ஒரு சூரைச் செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாக வேண்டும் என்று கோரி: **போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும்;** நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி,

ஒரு சூரைச் செடியின் கீழ் படுத்துக் கொண்டு நித்திரை பண்ணினான் 1 இராஜா.19:4,5.

"**போதும் கர்த்தாவே**" என்கிறீர்களா? உங்களுக்காகவே ஆண்டவராகிய இயேசு, "சோர்ந்து போகாமல் எப் பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார் "லூக்.18:1-8.

அடியேனுடைய வாழ்க்கையில் அநேக சந்தர்ப்பங்களில், அதிகமாக சோர்ந்து போனதுண்டு. எனது அனுபவத்தையே பாடலாக இயற்றி பதிவு செய்துள்ளேன்.

போதும் கர்த்தாவே
என் ஆத்துமாவை
எடுத்துக் கொள்ளும்
என் பிதாக்களைப் பார்க்கிலும்
நான் நல்லவன் அல்ல

1. இஸ்ரவேல் புத்திரர் உமது
உடன்படிக்கையை தள்ளிவிட்டார்
உம்முடைய பலிபீடத்தை
இடித்து தகர்த்துப் போட்டார்
உம் தீர்க்கரையே அவர் கொன்று போட்டார்
என் பிராணனை தேடுகிறார்

2. அமர்ந்த மெல்லிய சத்தமே
கெபி அருகினில் உண்டாயிற்றே
எலியாவே உனக்கு இங்கே
என்ன காரியம் என்றதே
ஏழாயிரம் பேர் இஸ்ரவேலில் உண்டு
அவர் பாகாலை முத்தம் செய்யார்

ஆமென் கர்த்தாவே
என் ஆத்துமாவை
நினைத்துக் கொள்ளும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சோதிக்கப்படவும் புடமிடவும் அனுமதிக் காவிடில் நமக்கு தேவனிடமிருக்கும் அன்பையும், தேவனுக்கு நம்மிடம் இருக்கும் அன்பையும் ஆழத்தையும் எப்படி அறிய முடியும்? ரோ.8:28-ல் கூறப்பட்டிருக்கும் "**அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.**" ரோ. 8: 28.

அவருடைய இருதயத்தை சந்தோஷிப்பிக்கும் சிறு குழந்தையைப் போன்ற எளிய விசுவாசம் நமக்கு இருக்கட்டும். பல ஆண்டுகளுக்கு முன்னால் நான் 'விசுவாசிப்பது மிகவும் கடினம்', என எண்ணினேன். உடனே தேவன் என் இருதயத்தில் பேசினார்: "விசுவாசிப்பது கடினமல்ல, ஒரு குழந்தை கூட விசுவாசிக்கலாம். நீ இதை குறித்து சிந்திக்க வேண்டாம்." என்றார். அது கடந்த வருடங்களிலெல்லாம் எனக்கு உற்சாகத்தையும் ஆறுதலையும் தந்தது.

"உன் சுய புத்தியின் மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிரு" நீதி.3:6. இந்த வசனத்தையும் தேவனையும் முழு இருதயத்தோடு விசுவாசித்தால் நமது இருதயத்தில் கவலை, பயம் மற்றும் திகில் இருக்கவே முடியாது. நாம் நமது சொந்த புத்தி மீது சாயவே கூடாது. சந்தேகம், பயம் போன்றவை தேவையற்றவை. 'பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அவன் ஓடிப்போவான்.' அவனுக்கு இடமே கொடுக்கக்கூடாது.(யாக்.4:7-8;எபேசி.4:27)

புயல் மேகத்தில் வானவில்லைப்பாருங்கள்.

தேவன் அற்புத அடையாளங்களைச் செய்கிறவர். அவருடைய வழிகள் நம்முடைய வழிகளல்ல. (ஏசா.55:8-13) தேவனுடைய வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்கு நிறைவேறி, அவன் ஈசாக்கைப் பெற்ற போது அவன் சரீரம் செத்தவனாயிருந்தான். (எபி.11:8-12)

நமது ஆண்டவர் அற்புதம் செய்கிற தேவ குமாரனாயிருந்தும், இரு கள்வர்களுக்கிடையே சிலுவையில் அறையப்பட்டு சீஷர்கள் சிதறி போன போது இயேசுவை பின்பற்றுபவர்களுக்கு அந்த நள்ளிரவு அந்தகாரம் ஒரு தோல்வியை போல காணப்பட்ட தல்லவா? ஆனால் ஐம்பது நாட்களுக்குள் பெந்தெகொஸ்தே நாளில் பெரிய எழுப்புதல் வெடித்ததே.

நாமும் அதற்குப் பின் மிகவும் இருளான நாட்களில் வாழுகிறோம். தேவன் இன்னொரு வல்லமையான எழுப்புதலைத் தரும் படியாகவும், புற ஜாதிகளிலிருந்து அனேகரைத் திரும்பக் கொண்டு வரும் படியாகவும் ஜெபிப் போம். நாம் நமது முகங்களை தேவனுக்கு நேராகத் திருப்புவோம். (தானி.9:3) அவரை நோக்கிக் கூப்பிட்டு, பற்றிக் கொண்டு விழித்துக் கொள்வோம். (ஏசா.64:7) அவர் வந்து நீதியை நம்மேல் வருஷிக்கப் பண்ணும்மட்டும் (ஓசி.10: 12) விழித்திருந்து ஜெபிப்போம்.

ஜான் ஃபிளெட்சர் தேவனோடு நடந்த ஒரு மனிதர்

John Fletcher - A man who walked with God

Oswald J.Smith

ஜான் ஃபிளெட்சர் (1729-1785) என்பவரை நவீன நிக்கோதேமு என்று சொல்லலாம். அவர் குணாதிசயத்தில் நல்லொழுக்கமும் நேர்மையுமுடைய வர். அதோடு முழுமையான மார்க்கப் பற்றுடையவர். 1729-ம் ஆண்டில் இவர் சுவிட்சர்லாந்தில் பிறந்தார். அவரது ஏழாவது வயதில் அவரில் மார்க்க அழுத்தம் ஏற்பட்டது. பிறவியிலேயே அவர் சீர்திருத்தமுடையவராகவும் நற்கலாச்சாரம் படைத்தவராகவுமிருந் தார். சுவிசேஷத்தை அறியாதபடியால் அதிக நற்கிரியைகளாலும் மிகுந்த மார்க்கப் பற்றாலும் தேவனால் அங்கீ கரிக்கப்படுவார் என்று நம்பினார். ஜெனிவாவில் மாணவராயிருக்கும் போது அவர் மார்க்க சம்பந்தமான புத்தகங்களை எழுதியும் அவர் தேவனுடைய கிருபையால் வரும் இரட்சிப்பின் விசுவாசத்தை அறிந்திருக் கவில்லை. அவர் எவ்வளவு குருடரா யிருந்தார் என்பதை அவர் விழித்து கண்டுபிடித்த போது மிகவும் ஆச்சரியப் பட்டார்.

இங்கிலாந்து சென்று மெதடிஸ் டுகளை சந்தித்த பிறகு தான் அவர் மனந்திரும்பினார். அவருடைய ஜீவிய சரித்திரத்தை எழுதிய ஆசிரியர் அவரது மனந்திரும்புதலைக் குறித்து இவ்வாறு எழுதுகிறார். "அவரது மனமாற்றம் மனோ பாவனை அல்ல, அது உண்மை யானது. அவரது உணர்ச்சிகளை மட்டு மல்ல அவரது நடத்தைகள் வரை தாக்க மளித்தது. அவர் இரட்சகரைக் கண்டு பிடித்து அவரை வழிகாட்டியாகப் பின்பற்றத் தீர்மானித்தது முதல் அவரது தீர்மானம் மாற்றக் கூடாததாயிருந்தது. அவர் ஒரு போதும் விருப்பத்தோடு திரும்பி பார்த்ததே இல்லை. அவருடன் ஆதியிலிருந்து பழகினவர்கள் முதல் திரள் கூட்டமான சாட்சிகள், அவர் தமது உயர்வான பணியில் தகுதியாக நடந்தார் என்றும் கிருபையில் வளர்ந்தார் என்றும் எல்லாவற்றிலும் தேவனாகிய நமது இரட்சகரின் உபதேசத்தை அழகு படுத்துகிறவராக வும் சாட்சி சொல்ல முன் வந்தார்கள்."

கிறிஸ்துவில் அவரது வாழ்வு

அவர் தமது சரித்திரத்தை எழுதியவர், தம்மைத் தாமே வேதத் தைப் படிக்கவும், தியானிக்கவும் ஜெபிக் கவும், தேவனோடு நெருக்கமாக நடக்கவும் ஒப்புக் கொடுத்தவர் அவரது முழு வாழ்வும் ஜெப வாழ்வாக மாறியது. அவரது மனம் தேவன் மேலேயே பற்றுதலாயிருந்தபடியால் சில வேளைகளில் "நான் எனது இருதயத்தை தேவனிடத்தில் உயர்த்திப் பிடிக்காமல் எனது இருக்கையிலிருந்து அசைய மாட்டேன்" என்று சொல்வார். ஜெப வாழ்த்துதல் தான் அவரது முதல் வாழ்த்துதல். ஜெபத்திற்கு வராதவர் களை குறித்து அவரிடம் கூறினால் "அவருக்காக ஜெபிப்போம்." என்பது தான் அவரது பதில்.

அவரது கடிதங்களிலும், கையேடுகளிலு முள்ள மேற்கோள்களை அவரது ஊழிய காலங்களிலிருந்து படிப்பது பிரயோஜனமா யிருக்கும்:–

"லௌகீக காரியங்களால் நான் என்னை கலங்கச் செய்யாததற்காக நான் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். வாழ்வில் தேவைக்கதிகமான பொருட்கள் சேர்ந்து விடக் கூடாதே என பயப்படுகிறேன். திரளான பொருட்கள் எனக்குக் கஸ்டத்தை ஏற்படுத்துகின்றன. எனது இரட்சகரோடு ஏழையாகவே வாழ விரும்புகிறேன்."

"பரிசுத்தம் என்ற கடலுக்குள் முழ்கி, தெய்வீக இரக்கத்தின் ஆழத்தை அறிய முற்படுவோம். மேலும் அந்த முயற்சி சாத்தியமற்றதாகி அவரை முழுமையாக அறிந்துக் கொள்ள முடியா விட்டாலும் நாம் அவரால் அறிந்துக் கொள்ளப்படுவோம். நாம் தேவனில் மிக மிக மகிழ்ச்சியாயிருப்போம். அந்த மகிழ்ச்சியின் மிகுதி துன்பத்தின் எல்லையாக இருக்கட்டும். ஏனெனில் நாம் எந்த ஈடும் செய்ய முடியாது.

"ஜீவனும் பரிபூரண ஜீவனும் கொடுக்கிற ஆண்டவருக்கு முன்பாக நான் கட்டளையிட்டு சொல்கிறதாவது- உங்களிடம் நான் கெஞ்சிக்கேட்பது என்னவென்றால், விசுவாசத்தால் செய்யப்படும் எல்லா கிரியைகளும் நம்பிக்கையின் கடும் முயற்சி, நீங்கள் எப்போதாவது உணர்ந்த அன்பின் ஜீவாலைகள் ஆகியவை தன்னைத் தாழ்த்தும் மனந்திரும்புதலின் மிக ஆழத்தில் மூழ்கி கிறிஸ்துவை உயர்த்தும் சந்தோஷத்தின் மிக உன்னத உயரங் களுக்கு எழும்புகிறது."

மேட்லி என்னுமிடத்தில் ஊழியம்

அவரது முதலும் ஒன்றே ஒன்றானதுமான போதகத் திருச்சபை இங்கிலாந்திலுள்ள மேட்லி என்ப தாகும். அங்கு குறிப்பிடத்தக்க ஒரு சிறந்த ஊழியத்தை தொடங்கினார். அதன் விளைவை "நித்தியம் மட்டுமே வெளிப்படுத்தும்"

இந்த அழகிய இடத்தில் ஓய்வு நாள் ஆசரிப்பு பகிரங்கமாக தீட்டு படுத்தப்பட்டு, மிக பரிசுத்தமானவைகள் காலில் போட்டு மிதித்து நிந்திக்கப் பட்டு, ஒழுக்கத்தின் கட்டுப்பாடுகள் பலவந்தமாக உடைக்கப்பட்டு, மார்க் கத்தின் வெளி அமைப்பு ஏளனமாக பார்க்கப்பட்ட மேட்லியில் ஃபிரளச்சர் நீதியை பிரசங்கிக்கும் பிரசங்கியாக நிற்க அழைக்கப்பட்டார். அங்கு எரியும் மற்றும் பிரகாசிக்கும் ஒளியாக இருபத் தைந்து ஆண்டுகள் பணியாற்றினார்.

தேவனுடைய சத்தியத்தையும் கிருபையையும் எதிர்த்தவர்களிடம்

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அவரது முகம் கற்பாறை போல வெளிப் படும். தேவனுடைய மிகுந்த கிருபை யின் ஊழியக்காரனாக அந்தந்த மனித னின் தேவைப்படி ஜீவ வார்த்தைகளை உத்தமமாகப் பகிர்ந்தளித்தார். அறிவீனரைப் போதித்து, எதிர்த்துப் பேசுகிறவர்களுடன் விவாதித்து, ஓழுக்கக் கேடானவர்களுக்கு அறிவுரை வழங்கி, பிடிவாதக்காரர்களை கடிந்துக் கொண்டு, சாதகமான கால நிலை களிலும் சாதகமற்ற கால நிலைகளிலும் ஒரு சுவிசேஷகனாக பணியாற்றினார். சுவிசேஷத்தின் சத்தியங்களை அறிவிக்கும் எந்த வாய்ப்பையும் நழுவ விடவில்லை. சிறு கூட்டமாக இருந் தாலும் தினதோறும் அவர்களை கூட்டிச் சேர்த்து, பொதுவாக மாலை வேளைகளில் வீட்டில் பொதுவான ஆராதனைக்கான இடத்திலோ அல்லது திறந்த வெளியிலோ சந்தோஷமாக சுவிசேஷத்தினை அறிவித்தார்.

விழிப்புடன் உற்சாகமான ஒரு போதகரைப் போல தமது மக்களின் விருப்பங்கள், மனநிலைகளை அறிந்து பாரத்தோடு அவர்களுடைய குடும்பக் காரியங்களை கவனித்து குடும்பம் குடும்பமாக போதித்து வந்தார். ஒருவரையும் மிகக் கீழ்த்தரமாகவோ, அதிக அறிவீனனாகவோ, அதிகமாக பாசம் காட்டியோ நடத்தாமல், கீழ்தரமானவர்கள், தகுதியற்றவர்கள் எல்லாருக்கும் சந்தோஷமாக, தன்னை ஒரு சேவையாளனாகப் பாவித்து, நல்ல பலன் கிடைக்க உழைத்தார்.

இவரது பரிசுத்த சந்திப்புகளில் அவர் மிகவும் உத்தமமாகவும் நெருக்க மாகவும் மக்களிடம் பரிசுத்த வாழ்வைக் குறித்து கெஞ்சிப் பேசுவது குடும்பம் முழுவதையுமே மனதுருகச் செய்யும். வயோதிபரும், இளைஞரும் சேர்ந்து கண்ணீர் வடித்து பய பக்தியுடன் தேவனுக்கு நேராகச் சரியாக தாழ்மை யுடன் திரும்ப தீர்மானம் எடுப்பார்கள்.

அவரது அதிக உறுப்பினர்கள் கொண்ட சபையில் பல அங்கத்தினர் வெளிச்சத்தை விட இருளை விரும்புகிற வர்களாகவும், தங்கள் தவறுகள் கண்டிக்கப்பட கூடாது என்பதற்காக அவரை ஏற்று கொள்ளாதவர்களா கவுமிருந்தனர். அவர்கள் தாங்கள் சீர்திருத்தப்பட விரும்பவில்லை. சில வேளைகளில், தனி நபர்களின் இரட்சிப் பைக் குறித்த அவரது பாரம் கட்டாயத் தாலும் கெஞ்சுதலாலும் வெளிப்படுத்தப் பட முடிவதில்லை. அவர் அதனை ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் முயற்சிப்பார். எதிர்க்கும் ஒரு குடும்பத் தின் வாசலைக் கடந்து போகும் போது உத்தம வாஞ்சையோடு இரக்கத்தின் வாசல் அவர்கள் அணுகுவதற்கு ஒரு போதும் தடை ஏற்படக்கூடாது என்று பெருமூச் செறிவார்.

"சுகவீனரை கவனிப்தில் அவர் மாதிரியாகவும் களைப்படையாதவரா யுமிருந்தார். 'அந்தப் பணி அவர் எப் போதுமே ஆயத்தமாயிருந்த பணி' என்று வெஸ்லி கூறியிருக்கிறார். கடும் குளிர் கால இரவில் யாரோ தட்டும் சத்தம் கேட்டால் ஒரு நிமிடத்தில் ஜன்னலைத் திறந்து விடுவார். யாரோ ஒருவர் கஷ்டத்தில் இருக்கிறார்கள் என்று புரிந்தால் இருளையும், இரவையும் கால நிலையின் கடுமை யையும் பாராது அவருடைய பதில், 'இதோ உடனடி வந்து கவனிக்கிறேன்' என்பதாகும்.

அவர் நீதியைப் பிரசங்கிப்பதில் அதிக முக்கியத்துவம் கொடுத்தாலும் இரக்கத்தைக் குறித்தும் பிரசங்கிப்பார். ஆயினும் உற்சாக மிகுந்த அவர் அதிக பலன் கிடைக்காததால் சோர்புற்று தேவ நடத்துதலை சந்தேகித்து விட்டு விட்டுச் செல்ல சோதிக்கப்பட்டது முண்டு. முதல் ஆண்டு குறைவான சபை மக்களோடும் அதிக அதைரியதுடனும் கடந்து சென்றது. ஆனால் இரண்டாம் ஆண்டு மக்களால் முழுவதும் நிரம்பிய கட்டிடத்தில் பிரசங்கிப்பவராக காணப் பட்டார். இதனால் மக்கள் சபைக்குள் செல்ல முடியாமல் வளாகத்தில் நிற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஆவிக்குரிய கடிதங்கள்

"உங்கள் ஜெபங்கள் கேட்கப் பட, உங்கள் சுயத்தை வெறுத்து, கர்த்தர் கொடுக்கிற சிலுவையை எடுக்க வேண்டும். இயேசுவின் நாமத்திலும், அவரது வல்லமையின் சத்துவத்திலும் எல்லாவற்றிலும் வெற்றி பெற வேண்டும். அப்போது மேலும் மேலும் இயேசுவே உலகத்தின் ஒளி என்பதை யும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் 'இருளில் நடப்பதில்லை' என்றும் கண்டு கொள்வீர்கள்."

இயேசுவோடுள்ள நெருங்கிய தோழமைக் குறைவால் தான் தனி ஜெபத்தில் மந்த நிலை ஏற்படுகின்றது. இதை மேற்கொள்ள உங்கள் தனி யறைக்குச் சென்று, உங்கள் மிகச் சிறந்த நண்பரை சந்திப்பது போல அவரது பாதத்தில் உங்களைப் படையுங்கள். உங்கள் குளிர்ந்த நிலையை அவரிடம் அறிக்கை செய்யுங்கள். அவர் உங்களுக்குக் காட்டிய அன்பைப் புகழுங்கள். அதன் மூலம் உங்கள் இருதயம் அவரை நேசிக்கும் அளவு நொறுங்கட்டும், ஆம் அவரது அன்பால் உருகட்டும்.

வேத கலாசாலை நடத்துதல்

இளைஞர்களை ஊழியத்திற்கு பயிற்றுவிக்க ஹன்டிங்டன் இளவரசர் ஒரு வேத கலா சாலையினை வேல்ஸில் ஸ்தாபித்தார். களத்தை மிக கவனமாக அளவிட்ட அவர் ஃபிளெட்சரை உயர் நிலை கண்காணிப்பாளராகத் தெரிந் தெடுத்தார். அவர் இந்தப் பதவியை அவரது மேட்லி போதகப் பணிக்கு இடையூறாக இருக்கக் கூடாது என்ற புரிந்து கொள்ளுதலின் அடிப்படையில் ஏற்றுக் கொண்டார்.

அந்த பக்தியுள்ள தேவ ஊழிய னுடைய ஊழியத்தில் ஒரு புதிய யுகம் ஆரம்பித்தது. அங்கு கற்ற இளைஞர்கள் மேல் கொடுக்கப்பட்ட தாக்கம் என்றுமே மறக்க முடியாது. அவரது ஜீவிய சரித்திரத்தை எழுதியவர், "அவரது ஒரே வேலை அவர்களை அழைப்பது, கெஞ்சிக்கேட்பது, அவரோடு சேர்ந்து ஆசீர்வாதத்தின் ஊற்றாகிய தேவனிடம் ஏறிச் செல்ல துரிதப்படுத்து வது மட்டுமே. அவர் வகுப்பறையில் மாணவர்கள் மத்தியில் செல்லும் போது மொழி, கலை, அறிவியல், இலக்கணம், தர்க்க சாஸ்திரம், மற்றும் தெய்வீகம் கூட ஒதுக்கி வைக்கப்பட்டன. அவரது முழு இருதயமும் அவரை அமைதியாக இருக்க அனுமதிக்கவில்லை. அவர் பேசியே ஆக வேண்டும். மாணவர்கள் இதுவரை கவனித்துக்கொண்டிருந்த வெர்ஜில், சிசரோ அல்லது வேறெந்த லெத்தின், கிரேக்க வரலாற்றாசிரியர், கவிஞர், தத்துவ ஞானி போன்றவர் களை விட இந்த தேவ ஊழியர் இயேசுக் கிறிஸ்துவைக் குறித்துப் பேசியதை ஆவலாய்க் கேட்க ஆயத்த மாயிருந்தனர். அவர்கள் அனைவரும் கவனித்ததோடு விரைவில் கண்ணீர் விட்டனர். எல்லா இருதயமும் அவரது ஆத்துமாவில் எரிந்து கொண்டிருந்த ஜீவாலையால் பற்றி எறிந்தன."

"தூய ஆவியால் நிரப்பப்படுவது ஒரு சிறந்த தகுதி என்றும் சுவிசேஷ பணிக்கு எந்தக் கல்வியையும் விட அது மேலானது என்றும் உணர்ந்த அவர் சிறிது நேரம் பள்ளி அறையிலிருந்து பேசுவது வழக்கம். பின்பு அடிக்கடி ஆவியானவரின் நிறைவுக்காக தாக முள்ளவர்கள் எனது அறைக்கு வாருங் கள்" என்பார். அனேகர் அவரைப் பின் செல்வார்கள். அங்கு பல் மணி நேரங் கள் ஜெபம் நடைபெறும். அது யாக் கோபு போராடி ஜெபித்தது போல் ஒருவர் பின் ஒருவராக ஜெபிப்பதா யிருக்கும். முழங்கால்கள் தளரும் படியான ஜெபம் பலமுறை நடக்கும்.

துன்பத்தின் சூளை

அவரது மிகவும் நல்ல ஆவிக்குரிய செய்திகள் அவரது உதடு களிலிருந்து வெளி வந்தவை அவரு டைய பயங்கரமான வியாதியாகிய காச நோயோடு தொடர்புள்ளவை. அவர் காச நோயினால் பாதிக்கப்பட்டி ருந்தார். உச்ச நிலையில் சோதிக்கப் பட்டு தகுதி பெற்றவராக வெளிவர இந்த நோய் ஏதுவாயிற்று. இந்த சமயத்தில் அவர் எழுதிய கடிதங்கள் நமக்குப் பிரயோஜனமானவை.

"நான் வாழ் நாள் மிகக் குறுகியது என்றும் காலம் மிக வேக மாகக் கடந்து போகிறது என்றும் கண்டு, சமயத்தை நான் பயபத்தியுடன் சந்தோஷமாக செலவு பண்ண வேண்டும். ..... "

(தொடரும்)

முக்கிய அறிவிப்பு

10-ம் தியதிக்குள் பக்திரிகை வரக் தவறினால் உடனே தகவல் தாருங்கள்.

Mobile : **95432 21008**

Whatsapp : **94897 40295**

e-mail:varukayinthoothan@hotmail.com

நம் மீதுள்ள கர்த்தருடைய தனிப்பட்ட அன்பும் கரிசனையும்

The Lord's personal love and concern for us

Rich Carmichael

சமீபத்தில் அனேக விசாரங்கள் மத்தியில் நான் கர்த்தரைத் தேடினேன். அவர் கிருபையாக நம்மீது கரிசனை வைத்திருப்பதையும், அவரது பிரசன்னத்தையும், உதவி செய்யும் இயலுமையையும், ஒரு நெருங்கிய உறவை வாஞ்சிப்பதையும் ஞாபகப்படுத்தினார். சுருங்கக் கூறினால் நமக்கு நேராக எவ்வளவு தனிப்பட்டவராக இருக்கிறார் என்பதை நினைவுபடுத்தினார். இந்த எளிய ஆனால் மகா பெரிய சத்தியம் பெரிய உற்சாகத்தையும் ஆறுதலையும் தந்ததோடு இன்னும் தந்து கொண்டேயிருக்கிறது. அது இன்னும் நான் அவரோடு தனி உறவு வைத்து கொள்ளத் தூண்டுகிறது. இவ்வாறு நீங்களும் ஆசீர்வதிக்கப்படலாம். நான் கர்த்தருடைய இருதயம் நமக்கு நேராக எப்படி இருக்கிறது என்பதையும் அதற்கு நாம் எப்படி பதில் செய்ய வேண்டும் என்பதையும் சிந்திக்க உங்களை அழைக்கிறேன்.

நாம் அவரது விசேஷித்த சிருஷ்டிகள்

முதலாவதாக நாம் இருப்பது நமக்கு நேராக அவரது தனிப்பட்ட விருப்பையும் அவரது அன்பையும் காண்பிக்கிறது. அவரது திட்டப்படி இவ்வுலகில் நாம் ஒவ்வொருவரும் இருக்கிறோம். நாம் அவரது கையின் வேலைப்பாடுகள். "நீர் என் உள்ளிந் திரியங்களைக் கைக் கொண்டிருக்கிறீர். என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர்" *(சங் 139:13)*. நாம் எல்லாரும் அவரது விவேஷித்த சிருஷ்டிகள். ஒப்பற்ற விதமாக தனிப்பட்ட முறையில் உண்டாக்கப்பட்டவர்கள். அவரது சாயலில் அவரைப் போல் சிருஷ்டிக்கப்பட்டோம். *(ஆதி 1:26,27)*. நாம் உருவாகுமுன்னே அவர் நம்மை அறிந்தவர். நமது வாழ்வின் எல்லா விபரங்களும், சூழல்களும் அவருக்குத் தெரியும்.*(சங்.139:1-24)*. அவரது கண்கள் நம்மீது இருக்கின்றன. அவர் நமக்காக அதிக கரிசனையுள்ளவர்*(1பேது3:12;5:7)*

நாம் அவரை அறிந்து கொள்ள அவர் விரும்புகிறார்.

அவருடைய மிகப் பெரிய ஆசை நாம் அவரை அறிந்து கொள்வதும், அவரோடு நெருங்கிய உறவு கொள்வதுமாகும். ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பின வருமாகிய இயேசுக் கிறிஸ்து வையும் அறிவதே நித்திய ஜீவன். *யோ.17:3* அவர் தமமுடைய முகத்தைத் தேட அழைப்பதோடு, அவரை முழு இருதயத் தோடும் முழு ஆத்துமாவோடும், தேடினால் அவரைக் கண்டு கொள்வோம். *(உபா.4:29)* என்கிறார். நாம் அவரைக் கிட்டிச் சேர்த்தால், அவர் நம்மைக் கிட்டிச் சேருவார்.*(யாக்.4:8)*

ஆரம்பத்திலிருந்தே அவரது ஆவல் நாம் அவரை அறிந்து அவரது பிரசன்னத்தை, ஆதாமும் ஏவாளும் பாவம் செய்வதற்கு முன்னால் அனுபவித்தது போல அனுபவிக்க வேண்டும் என்பதே. அவரது இந்தப் பேராவல் வேத புத்தகம் எங்கும் விளங்கப்பட்டுள்ளது. அதை புதிய உடன்படிக்கையின் வடிவமாக இப்படிக் காண்கிறோம்.

"என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவை களை எழுதுவேன். நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். அப்போழுது சிறியவன் முதற் கொண்டு பெரியவன் வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகையால் கர்த்தரை அறிந்து கொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதர னுக்கும் போதிக்க வேண்டுவதில்லை". *(எபி. 8:10,11)*

அவரது அன்பும், கரிசனையும், பிரசன்னமும்

தேவன் ஒரு அன்பின் தேவ னென்றும், தமது அன்பை நமக்காக பொழிகிறார் என்றும் வேத புத்தகம் வெளிப்படுத்துகிறது. *(ரோ 5:5)* அவரை நாம் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் நேசிக்க வேண்டும் என்றும் அவர் நம்மை அழைக்கிறார். *(மாற்கு 12:30)* அவர் நம்மை மிகவும் அன்போடு நேசிப்பதால் பிரதிவினை யாக அன்போடும் நமக்குரிய அனைத் தோடும் அவரை நேசிக்க வேண்டும் அவர் தாவீதைக் குறித்து 'என் இருதயத் திற்கேற்றவன்' *1சாமு13:14)* என்றார். ஆயினும் அந்த இருதயம் குறைவு படும் போது அவர் கரிசனை கொள்கிறார். "ஆனாலும் நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்குக் குறை உண்டு" *வெளி.2:4.*

மறுபடியும் மறுபடியும் அவரது வசனத்தின் மூலம் அவர் நம்மை எவ்வாறு நேசிக்கிறார், கவலைப் படுகிறார் அவர் எப்படி நம்மோடிருந்து உதவி செய்வார் என்பதைக் குறிப்பிடு கிறார். அவரது தனிப்பட்ட தொடர்பைக் கீழ்காணும் உதாரணங்கள் மூலம் காணலாம்.

"நீ பயப்படாதே நான் உன்னு டனே இருக்கிறேன் திகையாதே, கலங் காதே; நான் உன் தேவன்; நான் உன்னை பலப்படுத்தி, உனக்குச் சகாயம் பண்ணு வேன். என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்" *(ஏசா. 41:10)*

"உங்கள் முதிர்வயது வரைக்கும் நான் அப்படி செய்வேன்; நரை வயது மட்டும் நான் உங்களைத் தாங்குவேன் நான் அப்படிச் செய்து வந்தேன்; இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன்."*(ஏசா.46:4)*

"நீதிமான்கள் கூப்பிடும் போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர் களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கி விடுகிறார். நொருங்குண்ட இருதயமுள்ளவர்களுக்கு கர்த்தர் சமீப மாயிருந்து நருங்குண்ட ஆவியுள்ளவர் களை இரட்சிக்கிறார்". *(சங் 34:17,18)*

"அநாதி தேவனே உனக்கு அடைக்கலம், அவரது நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்" *உபா. 33:27.*

விசேஷித்த தொடர்புகள்

தேவன் நமது பரம பிதாவாக இருக்கிறார் என்பதும் நாம் அவரது பிள்ளைகள் என்பதும் எவ்வளவு பெரிய வெளிப்படுத்தப்பட்ட உண்மையா யிருக்கிறது. "நாம் தேவனுடைய பிள்ளை களென்று அழைக்கப்படுவதினாலே, பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினால் நம்மையும் அறியவில்லை" *(1 யோ. 3:1)* "மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடி யினால் அப்பா பிதாவே! என்று கூப்பிடத் தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப் பினார்." *(கலாத்.4:6)* என்பது எவ்வளவு ஆச்சரியமாக அனுபவம். நமது ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமார னாகிய இயேசுக் கிறிஸ்துவோடும் இருக்கிறது. *(1 யோவா 1:3)*

நமது பிதா நம் ஒவ்வெருவ ரோடும் சமயம் செலவு செய்ய விரும்பி, நம்மைத் தனி ஜெபத்திற்கு அழைக் கிறார். "நீயோ ஜெபம் பண்ணும் போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்தி லிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது, அந்தரத்தில் பார்க்கிற பிதா வெளியரங்கமாய் உனக்குப் பதிலளிப்பார்." *மத்.6:6.* நமது பரம பிதாவாகிய அவரைச் சார்ந்து நமது தேவைகளை சந்திக்கலாம். ஏனெனில் அவரது நீதியைத் தேடும் போது இவை களெல்லாம் கூடக் கொடுக்கப்படும். *(மத்.6:31-33)*. நாம் கேட்டால் நல்ல ஈவு களையும் பரிசுத்த ஆவியையும் கொடுப் பார் *(மத்.7:11;லூக்.11:13)* நம்மைத் தண்டிக்கவும் அவரைச் சார்ந்து கொள்ள வேண்டும். ஏனெனில் அவர் நமக்காகக் கரிசனையுள்ளவர். *(எபி. 12:5-11)*.

பழைய ஏற்பாட்டில் தனிப் பட்ட திருமண உறவை தமது ஜனத் தோடு வெளிப்படுத்துகிறார். *(ஏசா.54:5 எரே.31:32)* மேலும் அவர்களுடைய உத்தமமின்மையையும் வேசித்தன மாகக் குறிப்பிடுகிறார் *(எரே.3:8)* கிறிஸ்துவையும் அவரது மணவாட்டியு மாகிய உறவை விட மேலான தனிப் பட்ட உறவு உண்டா?

பாவம் உறவைத் துண்டிக்கிறது

பாவத்தைக் கர்த்தர் மிகவும் தனிப்பட்ட ஒன்றாகக் கருதுகிறார் ஏனெனில் அது நமது உறவை துண்

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

டித்து விடுகிறது "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே, அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. (ஏசா.59.2) நமது பாவங்கள் அவரது தூய ஆவியான வரை துக்கப்படுத்துகிறது." (எபே.4:30)

தாவீது **'தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவன்'** பாவம் தேவனோடுள்ள உறவை எவ்வளவாக பாதித்தது என உணர்ந்தான். நாத்தான் அவனை உணர்த்திய போது தன் இக்கட்டான நிலையை உணர்ந்தான். "தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாக பொல்லாங்கானதை நடப்பித்தேன்..... உமது சமூகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும்" சங். 51:4,11 என கதறினான். திரும்ப உறவு கொள்ளும் வழியையும் அறிந்து, "தேவனுக்கேற்கும் பலிகள் நொருங்குண்ட ஆவிதான், தேவனே நொருங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்" என்றான்.

இதைவிடப் பெரிய அன்பு இல்லை

ஆடு மேய்க்கும் சிறுவனாயிருந்தபோதே தாவீது கர்த்தர் நமது மேய்ப்பர் என்ற அழகிய சத்தியத்தை அறிந்திருந்தான். "நாம் அவர் ஜனங்களும் மேய்ச்லின் ஆடுகளுமாமே" (சங்.100.3). அவர் நம்மை நடத்தி, நம்மைத் தேற்றி, ஒருபந்தியைஆயத்தப்படுத்தி,தலையை எண்ணையால் அபிஷேகம் பண்ணுகிறார். (சங். 23:1-6) ஒரு ஆடு காணாமற் போய் விட்டாலும் அதைத் தேடிச் சென்று, அதைக் கண்டு பிடித்த பின்பு அதனை **'சந்தோஷத்தோடே அதைத் தன் தோள்களின் மேல் போட்டுக்கொண்டு'** (லூக். 15:4,5) வருகிறான். அவன் தன் ஆடுகளை அறிந்திருக்கிறது போல அவன் ஆடுகளும் அவனை அறிந்திருக்கின்றன. தன் ஆடுகளுக்காக அவன் தன் ஜீவனையும் கொடுப்பான் (யோ.10:14,15).

தேவனுக்கும் நமக்குமுள்ள உறவு இவ்வாறு தெளிவாகிறது. நம்மில் அவர் அன்புகூர்ந்தபடியால் மிகவும் அருமையான வெகுமதியை நமக்களித்திருக்கிறார். "தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் நம்மில் அன்பு கூர்ந்தார்." (யோ.3:16) "கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து, நம்மில் அன்பு கூர்ந்தது போல....." (எபேசி 5:2)

இயேசுவின் முன் மாதிரி

இயேசு ஏற்கெனவே தம்மை முற்றிலுமாக தனது பிதாவுக்கு ஒப்படைத்தது ஒரு தனிப்பட்ட உறவின் செயல் "ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும் போது: பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தப்படுத்தினீர். சர்வாங்க தகன பலிகளும், பாவ நிவாரண பலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர். அப்போழுது நான் தேவனே, உம் முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன், புஸ்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன்என்றார்." (எபி.10: 5-7)

இயேசுவுக்கு பிதாவுடனுள்ள அவரது தொடர்பு தனிப்பட்டதாயிருந்தது. அவர் பிதாவை கனம் பண்ணினார். அதிக நேரம் ஜெபத்தில் அவரோடு உறவாடி மரண பரியந்தம் அவருக்குக் கீழ்ப்படிந்திருந்தார். பிறரோடுள்ள இயேசுவின் உறவும் தனிப்பட்டது. கூட்டமாகவும், தனியாகவும் வந்த மக்களோடு தொடர்பு கொண்டு அவர்கள் தேவைகளை சந்தித்தார். சமாரியப் பெண்ணோடு அவர் சமயம் செலவு செய்ததும் (யோ.4:5) அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்ட பெண் விடுதலை பெற்றதும் (மாற்.5:25-34) சகேயு அவரைத் தேடியதும் (லூக்.19:2-10) அவர் இன்னும் அநேகரை சந்தித்ததும் உதாரணங்களாகும். அவர் அன்பிலும் உருக்கத்திலும் பொங்கி வழிகிறவராக தமது இதயத்தையும் ஆத்துமாவையும் மக்களுக்குள் ஊற்றினார். இன்றும் நமக்கு அப்படியே செய்கிறார்.

நம்பேரில் கிறிஸ்துவின் அன்பின் ஆழமும், நீளமும், அகலமும், உயரமும் அளவிடப்பட முடியாதது.(எபேசி.3:17-19). அவர் நமது பிரதான ஆசாரியர். எனவே நமது பெலவீனங்களில் நமக்காக மனமுருகி, எப்போதும் மன்றாடிக் கொண்டிருக்கிறார். (எபி.4:15;7:25) அவர் தொடர்ந்து இவ்வாறு அழைத்துக் கொண்டிருக்கிறார்:- "வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே!, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன், என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுமாயும் என் சுமை இலகுவாயுமிருக்கிறது என்றார்."(மத் 11:28-30)

அவருக்காகவே

நமது சேவை ஆண்டவருக்கு தனிப்பட்டதாயிருக்கிறது "ஏனென்றால் உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும், செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே"(எபி.6:10) இயேசு சொல்லும் போது :"பசியாயிருந்தேன், எனக்குப் போஜனம் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன்; என் தாகத்தைத் தீர்த்தீர்கள், அன்னியனாயிருந்தேன் என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள், வியாதியாயிருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள், காவலிலிருந்தேன் என்னைப் பார்க்க வந்தீர்கள்" (மத். 25:35,36)

தமது பிள்ளைகள் துன்பப்படுத்தப்படுவதைக் குறித்து அவரது தனிப்பட்ட கரிசனையை சவுலின் வாழ்க்கையில் பார்க்கிறோம். சவுலிடம் அவர் கேட்கும் கேள்வி: **"சவுலே சவுலே நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்"** அப்.9: 4

நமது பிரதியுத்தரம்

பல விதங்களில் நாம் பிரதியுத்தரம் செய்யக் கூடுமானாலும் ஆண்டவருடைய மிகப் பெரிய அன்பு கரிசனை இவற்றிற்குப் பதிலாக நான் செய்யக் கூடிய சில காரியங்களை சிந்திப்போம்.

1. அவரை முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் நேசிக்க வேண்டும்

"அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்".(1யோ.4:19) உங்கள் அன்பு குறையும் போது, அவரிடம் உங்கள் இருதயம் அவரது அன்பால் நிரப்பப்படும்படியும் அது வழிந்தோடும் படியும் ஜெபியுங்கள். எல்லாவற்றிலும் அவருக்கு கீழ்ப்படிய கவனமாயிருங்கள். "...ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக்கைக் கொள்ளுவான்..."(யோ.14:23)

2. ஜெபத்தில் அவரோடு சமயத்தைச் செலவு பண்ணுங்கள்

ஜெபம் என்பது முதலாவது உறவும் ஐக்கியமும் கொள்ளும் நேரம். "நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்துக் கொள்ளுங்கள்" சங்.46:10. மரியாளைப் போல தேவையற்ற காரியங்களில் கவனம் செலுத்தாமல் அவருடைய பாதத்தில் உட்கார்ந்திருந்து அவர் சொல்லுவதைக் கவனிக்க வேண்டும்.

3. அவருடைய வசனத்தைத் தழுவிக் கொள்ள வேண்டும்

அவருடைய வசனத்தை பொக்கிஷமாகவும், தம்மை அவர் வெளிப்படுத்தும் ஒரு ஈவாகவும் அவரது அன்பு, நோக்கம், சித்தம் ஆகியவற்றை வெளிப்படுத்துவதாகவும் உணர வேண்டும். அதில் களிகூரவும், அதை தியானிக்கவும் முழு மனதோடு அதைக் கை கொள்ளவும் வேண்டும். (சங்.119:15,16,69). பாவம் செய்யாதபடி வசனத்தை நம் இருதயத்தில் மறைத்து வைக்க வேண்டும். (சங் 119:11)

4. முற்றிலுமாக அவர் மீது நம்பிக்கை வைக்க வேண்டும்

"உன் சுய புத்தியின் மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிரு."(நீதி.3:5) "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள்."(1பேது.5:7) "கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்து விடு, அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒரு போதும் தள்ளாடவெட்டார்".(சங். 55:22)

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

5. அதிக விசுவாசத்தோடு ஜெபியுங்கள்

"ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்திலே சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக் கடவோம்."(எபி. 4: 16) "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின் படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறார் என்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்." *(1 யோவா. 5:14,15)*

6. பாவம் செய்யலாகாது

யோசேப்பின் மாதிரியைப் பின் பற்றுங்கள். "...நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி?" ஆதி 39:9. "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும், உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள்." *(1 பேது. 1:15)*

7. உங்களை முழுவதுமாக அவருக்கு அர்ப்பணியுங்கள்

ஏசாயாவைப் பின் பற்றுங்கள். "இதோ அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும்" *(ஏசா.6:8)* "தேவனே உம்முடைய சித்தத்தின் படி செய்ய, இதோ வருகிறேன் என்று சொன்னார் "(எபி. 10:9) "...நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் என்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." *(ரோமர் 12:1)*

8. அவரை ஆராதித்து நன்றி செலுத்துங்கள்

"என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி" *(சங்.103:1)* "அவர் வாசல்களில் துதியோடும்..... அவரைத் துதித்து அவருடைய நாமத்தை ஸ்தோத்தரியுங்கள்" *(சங்.100:4)*

ஆனாலும் நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்குக் குறை உண்டு.

விடாமுயற்சியுடன் தேடுதல்

Making diligent search

Lois J. Stucky (1928 - 2014)

தேவனுடைய அன்பின் முழு பாரத்தையும் சுமக்க கூடிய ஒருவரை தேவன் கண்டுபிடித்தால், அது நம் ஆண்டவரின் இருதயத்திற்கு எவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுக்கும்! அந்த அன்பு, அவர் பாரத்தை பெற்றுக் கொள்ளுகிற மக்களைத் தேடுகிறது. தேவனுடைய அன்பு, உதாசீனம் பண்ணுகிற மக்களை சந்திக்கும் போது துக்கப்படுகிறது.

தேவன் இரத்தம் சிந்தி விலைக்குக் கொண்ட தமது பிள்ளைகள் அவரது அன்பில் நிலைத்திருக்க விரும்புகிறார். *(யோவா.15:9-11 படிக்க)*

அவரது அன்பில் நிலைத்திருப்பது அல்லது அதிலே தங்கியிருப்பது அல்லது அன்பிலேயே வாழ்ந்து கொண்டிருப்பது எப்படி? இதற்கான பதிலை இயேசு ஏற்கெனவே தம் சீஷர்களிடம் கூறியிருந்தார். "என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக் கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்" யோ.14:21. தேவ வசனத்திற்குக் கீழ்ப்படிவது அவரது அன்பில் நிலைத்திருப்பதற்கு முக்கிய ஏதுவாயிருக்கிறது. இதற்குக் காலை தியானம் இன்றியமையாதது. அதிகமாகக் கீழ்ப்படிதலைக் குறித்துக் கற்றுக் கொள்ளவும், அதற்குரிய பெலனைப் பெற்றுக் கொள்ளவும் அது ஏதுவாகிறது.

மிகவும் நிச்சயமற்ற இந்த நாட்களில் சூழ்நிலைகள் சாதகமாக இருக்கும்போது நம்மால் முடிந்தவரை அவரிடம் கிட்டிச் சேருவது ஞானமாயிருக்கும். பேரிடர்கள் திடீரென்று நடக்கும். இந்த உலகில் எப்போது என்ன வன்முறைகள் வெடிக்கும் என்பதை யார் அறிவார்கள்?

ஒருவேளை நாம் அவரில் கொண்டுள்ள அன்பை சோதிக்க வன் முறைகளோ, பலவந்தங்களோ, இழப்புகளோ நிகழாமலிருக்கலாம். ஆனால் இவ்வுலகின் கவர்ச்சிகரமான கட்டுபாடற்ற கவலையற்ற வாழ்கை இன்பங்கள், தேவ அன்பைத் தணித்து விடலாம். புத்தியற்ற கன்னிகைகளைப் போல நமது தீவட்டிகளிலோ அல்லது பாத்திரங்களிலோ எண்ணெய் தீர்ந்து போகலாம். *(மத்.25:1-13)* தருணங்களை வீணாக்க வேண்டாம். நம் வாழ்கையில், நம் தேசத்தில் அல்லது இந்த உலகத்தில் எற்படும் புயல்களை எதிர்கொள்ள ஆவிக்குரிய பெலனை பெற்று நம் ஆண்டவரின் வருகைக்கு ஆயத்தமாக வேண்டும். நாம் அவருடைய வருகையில் புத்தியுள்ள கன்னிகைகளைப் போல எரிகிற தீவட்டிகளோடு மணவாளனை தைரியமாக சந்திக்க ஆயத்தமா? தேவனை முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், முழு மனதோடும் நேசிப்பது அவரில் நிலைத்திருக்க வளர உதவும். இது இயேசுவின் முதற் கட்டளை மாத்திரமல்ல, மிகப் பெரிய கட்டளை. *(மத். 22:37-38)*

ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்

Pray For one another

தூதன் ஊழிய பணியாளர்களாகிய நாங்கள், நீங்கள் ஆவியில் எங்களிடம் காண்பிக்கும் அன்புக்காகவும் நாங்கள் உங்களிடம் வைத்திருக்கும் அன்புக்காகவும் கர்த்தரைத் துதிக்கிறோம். இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் ஏறெடுக்கும் ஜெபத்தை நாமும் மனப்பூர்வமாய் ஏறெடுப்போம்.

"இதினிமித்தம் ..... நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்காற்படியிட்டு, நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினால் கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி நிலை பெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங் கூட கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக் கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே உங்களுக்கு அனுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். "

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

ஜெபம் என்பது முதலாவது உறவும் ஐக்கியமும் கொள்ளும் நேரம்.

அவருடைய மிகப் பெரிய ஆசை நாம் அவரை **அறிந்து** கொள்வதும், அவரோடு **நெருங்கிய** உறவு கொள்வதுமாகும்.

நமக்கு எதிரான **சவாலும்** எச்சரிப்பும் நம்மைத் தாமே உற்சாகப்படுத்தி தேவனைப் பற்றிக் கொண்டு நமது குறிக்கோளுக்கு நேராக தொடர்ந்து ஓடச் செய்ய வேண்டும்.

"**போதும் கர்த்தாவே**" என்கிறீர்களா? உங்களுக்காகவே ஆண்டவ ராகிய இயேசு **சோர்ந்து போகாமல்** எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் என்பதைக் குறித்து ஒரு உவமையைச் சொன்னார்.

நாம் **அவரைக் கிட்டிச்** சேர்த்தால், அவர் **நம்மைக் கிட்டிச்** சேருவார்.

ஜான் ஃபிளெட்சர் - சாதகமான கால நிலைகளிலும் **சாதகமற்ற** கால நிலைகளிலும் ஒரு சுவிசேஷகனாக பணியாற்றினார்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason